*கவனிக்க.- 11.01.2013 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி III மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1794 - 2013 ජනවාරි මස 18 වැනි සිකුරාදා - 2013.01.18

*1794 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி IV(அ) - மாகாண சபைகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | 284 |
| பதவிகள் - வெற்றிடம் | - |

| | பக்கம் |
|---|---|
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 2040 |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |
| | - |
| | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2013, பெப்புருவரி மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2013, சனவரி மாதம் 24 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# மாகாண சபை அறிவித்தல்கள்

**1946 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க பொது மயானங்கள் மற்றும் தனிப்பட்ட மயானங்கள் பற்றிய கட்டளைச் சட்டத்தின் 11 ஆம் பந்தியின் 5 (1) இன் கீழ் செய்யப்படுகின்ற அறிவித்தல்**

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (ஏற்பாடுகள்) சட்டத்தின் 02 ஆம் உறுப்புரையின் 11 ஆம் உறுப்புரையின் (அ) உப பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 1946 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க பொது மயானங்கள் மற்றும் தனிப்பட்ட மயானங்கள் பற்றிய கட்டளைச் சட்டத்தின் 11 ஆம் பந்தியின் 5 (1) இன் கீழ் மாகாண சபையின் உள்ளூராட்சி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் வடமேல் மாகாண சபையின் முதல் அமைச்சரும் மாகாண சபையின் உள்ளூராட்சி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சருமான அதுல சரத் குமார விஜேசிங்ஹ ஆகிய என்னால் வடமேல் மாகாணம், குருநாகல், வாரியபொல பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் அமைந்துள்ள கீழ் காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மயானங்கள், சவங்களை புதைக்கின்ற அல்லது தகனம் செய்வதற்கான பொது மயானங்களாக இத்தால் வெளியிடப்படுகின்றது.*

(சட்டத்தரணி) அதுல சரத் குமார விஜேசிங்ஹ,
முதலமைச்சரும் மாகாண சபையின்
விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரும்,
வடமேல் மாகாண மாகாண சபை.

முதலமைச்சர் அலுவலகம்,
குருநாகல்,
*2012, ஒற்றோபர் 2.*

**வாரியபொல பிரதேச சபை**

**1946 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க பொது மயானங்கள் மற்றும் தனிப்பட்ட மயானங்கள் பற்றிய கட்டளைச் சட்டத்தின் 11 ஆம் பந்தியின் 5 (1) இன் கீழ் கொனொத்த மயானத்தை பிரகடனப்படுத்தல்**

*வாரியபொல பிரதேச சபை அதிகார எல்லைக்குள் கொனொத்த என்ற கிராமத்தில் க. கி. ப. 2687 ஆம் இலக்க வரைபடத்தில் 18/4 ஆம் குறிப்பிடப்பட்டுள்ள மினீபிடியஹேன என்ற 74 ஆம் இலக்க காணி.*

**அட்டவணை**

| | | |
|---|---|---|
| காணி அமைந்துள்ள பிரதேச செயலாளர் பிரிவு | : | வாரியபொல |
| கிராம உத்தியோகத்தர் பிரிவு | : | 1280 கொனொத்த |
| கிராமம் | : | கொனொத்த |
| காணியின் பெயர் | : | மினீபிடிய ஹேன |

**எல்லைகள் :**

வடக்கு : 72 ஆம் 73 ஆம் இலக்க காணித்துண்டுகள் ;
கிழக்கு : 73 ஆம் இலக்க காணித்துண்டு ;
தெற்கு : 73 ஆம் இலக்க காணித்துண்டு ;
மேற்கு : 204 ஆம் இலக்க காணித்துண்டு.

என்ற எல்லைகளுக்கு உட்பட்ட 0.157 ஹெக்டேயர் விஸ்தீரணமுடைய காணி.

*1-454*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.